# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி, B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09–ம் நாள் வியாழக்கிழமை**

## I.A.No.06 of 2025 in O.S.No. 22 of 2021
**CNR.No.TNKI13-000017-2021**

1. சரளா
2. செல்வி ...மனுதாரர்கள் / வாதிகள்

//எதிர்//

1. சிவலிங்கம் (இறப்பு)
2. வேல்முருகன்
3. வட்டாட்சியர், ஊத்தங்கரை
4. வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி
5. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி

...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

6. வசந்தா
7. ஜெயம்மாள்
8. சரிதா
9. சிவசங்கர்

...எதிர்மனுதாரர்கள் / உத்தேச பிரதிவாதிகள்

இந்த இடைமனுவானது 12.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. முருகேசன், அவர்களும் மற்றும் 2 மற்றும் 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி, அவர்களும் முன்னிலையாகி, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்களாகக் கருதப்பட்டு, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை VI விதி 17 சி.பி.சி–ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தப்பாடு விவரங்களின் படி தாவாவை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுஉரை சுருக்கம்:**

2(i). மனுவில் மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் வாதிகள். மேற்படி வழக்கின் 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை தாவாவில் தரப்பினர்களாக சேர்க்க தாக்கல் செய்த I.A.No. 05 of 2024 மனு கடந்த 17.02.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டது. மேலும் 9-ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்த I.A.No. 03 of 2024 மனு கடந்த 16.07.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டது என்பதால் மேற்கண்ட எதிர்மனுதாரர்கள் / உத்தேச பிரதிவாதிகளை தாவாவில் 6 முதல் 9 வரையான பிரதிவாதிகளாக சேர்த்து திருத்தம் செய்ய வேண்டும்.

2(ii). மேலும் தாவா 7-வது பாராவுக்கு அடுத்து 7(a) பாராவாக மேற்படி தாவா சொத்தினை இறந்துவிட்ட 1-ம் பிரதிவாதி, 2-ம் பிரதிவாதி மற்றும் 9-ம் பிரதிவாதி சிவசங்கர் என்பவருக்கு கடந்த 03.08.2018 தேதியில் ஆவண எண். 3025/2018 என தானப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்பதால் மேற்கண்ட "கடந்த 03.08.2018 தேதியிட்ட ஆவண எண். 3025/2018 ஆவணம் செல்லதக்கதல்ல என விளம்புகை செய்ய வேண்டியுள்ளது.” என சேர்த்தும், தாவா 9-வது பாராவில் 5-வது பக்கத்தில் 11-வது வரியில் நாளிலும் என்பதற்கு அடுத்து தாவா சொத்தினை இறந்துவிட்ட 1-ம் பிரதிவாதி, 2-ம் பிரதிவாதி மற்றும் 9-ம் பிரதிவாதி சிவசங்கர் என்பவருக்கு

கடந்த 03.08.2018 தேதியில் ஆவண எண். 3025/2018 என தானப்பத்திரம் எழுதிக் கொடுத்த நாளிலும் என சேர்த்தும் திருத்தம் செய்ய வேண்டும்.

2(iii). தாவா 6-வது பக்கத்தில் மொத்த நீதிமன்ற கட்டணம் என்பதற்கு முன்பு கடந்த 03.08.2018 தேதியிட்ட தானபத்திர எண். 3025/2018 செல்லதக்கதல்ல என விளம்புகை பரிகாரத்திற்காக மதிப்பு ரூபாய் 5000/- என சேர்த்தும், கடந்த 03.08.2018 தேதியிட்ட தானபத்திர எண். 3025/2018 செல்லதக்கதல்ல என விளம்புகை பரிகாரத்திற்காக செலுத்தப்படும் நீதிமன்ற கட்டணம் பிரிவு 25(d)-ன்படி ரூபாய் 150/- மொத்த நீதிமன்ற கட்டணம் என்பதில் ரூபாய் 749/- என்பதை நீக்கி ரூபாய் 899/- என சேர்த்தும், தாவா 11-வது பாராவில் 2-வது பரிகாரத்திற்கு அடுத்து 2(a) கடந்த 03.08.2018 தேதியிட்ட ஊத்தங்கரை சார்பதிவக தானபத்திர எண். 3025/2018 செல்லதக்கதல்ல என விளம்புகை செய்தும் என திருத்தப்பாடு செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்களின் எதிருரை சுருக்கம்:**

3(i). எதிர்மனுதாரர்கள் மனு சங்கதிகளை மறுத்துரைத்தும், 1-ம் பிரதிவாதி எப்பொழுது இறந்தார் என்ற விவரத்தை குறிப்பிடாமல் அவரது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும். 2-ம் பிரதிவாதி ஏற்கனவே 2022-ம் ஆண்டிலேயே எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது 1-ம் பிரதிவாதி 2-ம் எதிர்மனுதாரர் / 2-ம் பிரதிவாதிக்கும் மற்றும் 4-ம் உத்தேசஎதிர்மனுதாரருக்கும் ஆவண எண். 3015/2018 என தான பத்திரம் ஒன்றினை கடந்த 03.08.2018 தேதியில் எழுதிக்கொடுத்துள்ள விவரத்தை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3(ii). அதன்பின்னிட்டு 3 ஆண்டுகள் கழித்து தற்போது 2-ம் உத்தேச பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவும், தான பத்திர எண். 3015/2018 ஆவணத்தை செல்லாது என அறிவிக்க கோரியும் மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும். வழக்கினை காலம் கடத்தவும், இந்த எதிர்மனுதாரர்களை வீணாக அலைகழிக்கவும் மனுதாரர்கள் இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**5. சாட்சியம்:**

5(i). இம்மனுவிற்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**விவாதம்:**

6. மனுதாரர் இந்த மனுவை இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தப்பாடு விவரங்களின் படி தாவாவை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார். மனு சங்கதிகளின்படி 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் 1-ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்க வேண்டி I.A.No. 05/2024 என்ற மனு தாக்கல் செய்து அது கடந்த 17.02.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டது என்றும், 4-ம் உத்தேச பிரதிவாதி சிவசங்கர்

என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க I.A.No. 03/2024 என்ற மனு தாக்கல் செய்து அது கடந்த 16.07.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி அவர்களின் பெயர்களை தாவாவில் திருத்தம் செய்ய வேண்டியும், சிவசங்கர் பெயரில் கடந்த 03.08.2018 தேதியில் ஏற்பட்டுள்ள ஆவணத்தை இல்லாநிலையது செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரத்தை சேர்த்து தாவாவை திருத்தம் செய்ய வேண்டி அனுமதி கோரி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இந்த மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேற்படி மனுக்கள் அனுமதிக்கப்பட்டது உண்மை என்றும் ஆனால் மனுதாரர் கோரியுள்ள திருத்தப்பாடு விவரமான 03.08.2018 தேதியிட்ட தான பத்திரம் குறித்த சங்கதிகளை 2-ம் பிரதிவாதி ஏற்கனவே தனது பதிலுரையில் கடந்த 2022-ம் ஆண்டிலேயே தெரிவித்துள்ளார். அதனால் 3 ஆண்டுகள் கழித்து மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் கால வரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது, எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

8. மேற்படி இரு தரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்கையில் இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதியின் வாரிசுகளான 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க I.A.No. 05/2024 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அது கடந்த 17.02.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும் 9-ம் எதிர்மனுதாரரான சிவசங்கர் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட I.A.No. 03/2024 படி மனு தாக்கல்

செய்யப்பட்டு அந்த மனுவானது கடந்த 16.07.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. இந்த நிலையில் அந்த தரப்பினர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க செய்ய கோரும் திருத்தப்பாடு ஆனது அனுமதிக்க வேண்டிய ஒன்று, அது அவசியமானதாகவும் உள்ளது. மற்றபடி 9-ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள தான பத்திரத்தை செல்லாது என்ற பரிகாரத்தை சேர்த்தும் அது குறித்து நீதிமன்ற கட்டணத்தில் திருத்தம் செய்ய கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பரிகாரங்களை பரிசீலனை செய்கையில் பிரதிவாதி தரப்பில் 2-ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 17.06.2022 தேதியில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மேற்படி பதிலுரை பத்தி 10-ல் சிவசங்கர் என்பவருக்கு கடந்த03.08.2018 தேதியில் ஆவண எண். 3025/2018 படி தானப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அது குறித்து இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கோரவில்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரைக்கு பின்னிட்டு 3 ஆண்டுகளுக்குள் இந்த மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் சரியானதாகவும் இருந்த போதிலும் மேற்படி சிவசங்கர் என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட I.A.No. 03/2024 என்ற மனுவானாது கடந்த 16.07.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது அந்த மனுவானது கடந்த 27.03.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த மனு நிலுவையில் இருந்த காலமானது காலவரை வரம்பிற்கு விலக்கு அளிக்கப்பட்ட காலமாக கருத வேண்டியது அவசியமானதாக உள்ளது. வாதிகளுக்கு கடந்த 2022-ம் ஆண்டிலேயே சிவசங்கர் பெயரில் உள்ள ஆவணம் குறித்து தெரிய வந்தது என்று

எடுத்துக்கொண்டாலும் கூட அந்த பதிலுரையானது கடந்த 16.06.2022 தேதியில் வாதியின் வழக்கறிஞருக்கு சார்வு செய்யப்பட்டுள்ளது. அது முதல் கொண்டு 3 ஆண்டு காலமானது 16.06.2025-ம் தேதியில் முடிவடைகிறது.

10. மனுதாரர்கள் இந்த மனுவை 23.07.2025 தேதியில் திருத்தப்பாடு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் அதற்கு இடையில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த I.A.No. 03/2024 என்ற மனுவானது நிலுவையில் இருந்த காலம் முழுவதும் பிரிவு 12 கால வரையறை சட்டத்தின் படி விலக்கு அளிக்கப்பட்ட காலமாக கருத வேண்டியுள்ளது. ஏனெனில் உத்தேச பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க அனுமதிக்கப்பட்ட பின்புதான் அவர் குறித்து புதிய பரிகாரங்களை கோரி வழக்கில் திருத்தப்பாடு செய்ய இயலும். அதன்படி I.A.No. 03/2024 மனுவானது 16.07.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டு அடுத்த 10 நாட்களுக்குள்ளாக கடந்த 23.07.2025 தேதியில் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவானது காலவரையறை சட்டத்தின்படி பாதிக்கப்படவில்லை என்று முடிவு கண்டு மனுதாரர் கோரியுள்ள திருத்தப்பாடுகள் செய்ய அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
**ஊத்தங்கரை**

**இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
**ஊத்தங்கரை**